APRIL 2024

62589/146C2A/
144C2A/145C2A/
147C2A/148C2A/
118C2A/151C2A/
117C2A

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — ($10 \times 2 = 20$ marks)

Answer any TEN questions.

1. What is Hire Purchase System?
   வாடகை கொள்முதல் முறை என்றால் என்ன?

2. What is down payment?
   உடனடி செலுத்துதல் என்றால் என்ன?

3. What is repossession?
   மீள் உடமையாக்கல் என்றால் என்ன?

4. Mention any two differences between branch and department accounts.
   கிளை கணக்குகளுக்கும், துறைவாரி கணக்குகளுக்கும் உள்ள ஏதேனும் இரண்டு வேறுபாடுகளை குறிப்பிடுக.

5. State any two objectives of branch accounts.
   கிளை கணக்கின் நோக்கங்கள் ஏதேனும் இரண்டினை கூறுக.

6. What is a partnership deed?
   கூட்டாண்மை ஒப்பந்தம் என்றால் என்ன?

7. Explain the meaning of profit-sharing ratio.
   இலாப பங்கு விகிதம் என்றால் என்ன?

8. What are the adjustments to be made when a partner is retired?
   ஒரு கூட்டாளி விலகும் போது செய்யப்பட வேண்டிய சரிகட்டல்கள் யாவை?

9. Give the meaning of Dissolution.
   கலைப்பு என்பதன் பொருள் தருக.

10. What do you understand by piecemeal distribution?
    சிறு துண்டு பகிர்ந்தளிப்பு பற்றி நீவிர் அறிவது என்ன?

11. List out any two roles of IFRS.

IFRS-யின் ஏதேனும் இரண்டு பங்கினை வரிசைப்படுத்துக.

12. How many Accounting Standards are in India?

இந்தியாவில் எத்தனை கணக்கியல் தரநிலைகள் உள்ளன?

SECTION B — ($5 \times 5 = 25$ marks)

Answer any FIVE questions.

13. On 1.1.2016, 'X' purchased a machinery on hire purchases system. The payment is to be made Rs.4,000 down (on signing of the contract) and remaining by Rs.4,000 annually for three years. The cash price of the machinery is Rs.14,900 and the rate of interest is 5% p.a. Calculate the interest in each year's instalment.

2016, ஜனவரி 1-ஆம் தேதியன்று 'X' என்பவர் இயந்திரம் ஒன்றினை வாடகை கொள்முதல் முறையில் வாங்கினார். நிபந்தனைகளின்படி ஒப்பந்தத்தில் கையொப்பம் இடும் பொழுது ரூ.4,000 -மும், மீதித் தொகையினை ஒவ்வொரு ஆண்டும் ரூ.4,000 என மூன்று ஆண்டுகளுக்கு செலுத்தப்பட வேண்டும். அந்த இயந்திரத்தின் ரொக்க விலை ரூ.14,900. ஒவ்வொரு ஆண்டும் செலுத்த வேண்டிய வட்டி விகிதம் 5% ஆகும். ஒவ்வொரு ஆண்டுத் தவணையிலும் செலுத்தப்பட வேண்டிய வட்டியினை கணக்கிடவும்.

14. Fancy clothes limited opened a branch on 1st January, 2020 at Delhi. The figures given below are for the year 2020.

	Rs.
Goods sent to Branch	25,000
Cash sales	10,000
Credit sales	18,000
Cash received from debtors	16,000
Discount allowed to them	300
Cash sent to Branch for expenses	3,500
Stock on 31st December 2020	4,000

Prepare Branch Account.

பேன்ஸி கிளாத் லிமிடெட் தனது கிளை ஒன்றினை 1.1.2020 டெல்லியில் துவங்கியது. 2020-ம் ஆண்டுக்குரிய தொகை விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது

	ரூ.
கிளைக்கு அனுப்பிய சரக்கு	25,000
ரொக்க விற்பனை	10,000
கடன் விற்பனை	18,000
கடனாளிகளிடம் பெற்ற ரொக்கம்	16,000
அவர்களுக்கு அளித்த தள்ளுபடி	300
செலவுகளுக்காக கிளைக்கு அனுப்பிய ரொக்கம்	3,500
31 டிசம்பர் 2020 தேதி சரக்கிருப்பு	4,000

கிளை கணக்கினை தயார் செய்க.

15. From the following details, prepare departmental trading accounts:

Particulars	Department A	Department B
Opening stock	9,000	8,400
Total purchases	27,000	21,600
Total sales	42,000	36,000
Closing stock	10,800	4,800
Credit purchases	17,000	10,600
Credit sales	5,000	6,000

பின்வரும் விவரங்களிலிருந்து துறைவாரி வியாபாரக் கணக்கினை தயாரிக்கவும்

விவரங்கள்	துறை A	துறை B
ஆரம்ப சரக்கிருப்பு	9,000	8,400
மொத்த கொள்முதல்	27,000	21,600
மொத்த விற்பனை	42,000	36,000
இறுதிச் சரக்கிருப்பு	10,800	4,800
கடன் கொள்முதல்	17,000	10,600
கடன் விற்பனை	5,000	6,000

16. What are the essential features of partnership?
கூட்டாண்மையின் முக்கியமான சிறப்பம்சங்கள் யாவை?

17. 'A' and 'B' are partners sharing profit and losses in the ratio of 5:3. They admit 'C' as a partner. 'C' acquires his share 4/20 from 'A' and 2/20 from 'B'. Find out the new profit-sharing ratio and sacrificing ratio.

'ஏ' மற்றும் 'பி' ஆகிய இரண்டு கூட்டாளிகளும் முறையே 5:3 என்ற விகிதத்தில் இலாப நட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர். அவர்கள் 'சி' என்பவரை புதிய கூட்டாளியாக சேர்த்துக் கொண்டனர். 'சி' தனது பங்கினை 'ஏ'யிடமிருந்து 4/20 பங்கும் மற்றும் 'பி' யிடமிருந்து 2/20 பங்கும் பெற்றுக் கொண்டார். புதிய இலாப விகிதம் மற்றும் தியாக விகிதத்தையும் கண்டுப்பிடிக்கவும்.

18. Ram, Rahim, and Raman share profits in the ratio of 3:2:1. On 31.12.2022, their balance sheet was as follows:

Liabilities	Rs.	Assets	Rs.
Creditors	12,000	Machinery	25,000
General Reserve	3,000	Stock	11,000
Capital:		Debtors	9,500
Ram	20,000	Goodwill	13,000
Rahim	15,000	Cash	1,500
Raman	10,000		
	60,000		60,000

On the above data, the firm was dissolved. The assets except cash realized Rs.60,000. The creditors were settled at Rs.11,500. Dissolution expenses amounted to Rs.800. Give Necessary Ledger A/c's.

ராம், ரஹிம் மற்றும் ராமன் ஆகியோர் இலாபத்தை 3:2:1 என்ற விகிதத்தில் பங்கிட்டுக் கொள்ளும் கூட்டாளிகள் 31.12.2022 அன்று இருப்பு நிலைக் குறிப்பு வருமாறு :

பொறுப்புகள்	ரூ.	சொத்துக்கள்	ரூ.
கடனீந்தோர்	12,000	இயந்திரம்	25,000
பொது காப்பு	3,000	சரக்கிருப்பு	11,000
மூலதனம் :		கடனாளிகள்	9,500
ராம்	20,000	நற்பெயர்	13,000
ரஹிம்	15,000	ரொக்கம்	1,500
ராமன்	10,000		
	60,000		60,000

மேற்கூறிய தேதியில் கூட்டாண்மை கலைக்கப்பட்டது. ரொக்கம் தவிர சொத்துக்கள் விற்றது ரூ.60,000. கடனீந்தோர்களுக்கு ரூ.11,500 செலுத்தப்பட்டது. கலைப்பு செலவுகள் ரூ.800 ஆகும். தேவையான பேரேட்டு கணக்குகளை தருக.

19. Distinction between Ind AS and IFRS.

Ind AS மற்றும் IFRS-யினை வேறுப்படுத்துக.

SECTION C — ($3 \times 10 = 30$ marks)

Answer any THREE questions.

20. 'M' Ltd. sold a lorry to Arun on Hire Purchase system. The Cash Price was Rs.7,45,000. Rs.2,00,000 was to be paid on delivery and the balance in three installments of Rs.2,00,000 each at the end of year. 'M' Ltd charged interest of 5% per annum. Arun depreciates the lorry at 10% per annum on reducing balance method.

Prepare necessary ledger accounts in the books of Arun.

'M' லிமிடெட் அருண் என்பவருக்கு ஒரு லாரியை வாடகை கொள்முதல் முறையில் விற்பனை செய்தார். அதன் ரொக்க விலை ரூ.7,45,000. ரூ.2,00,000 லாரியை கொடுக்கும் பொழுதும் மீதியை மூன்று தவணைகளாக ரூ.2,00,000 வீதம் ஒவ்வொரு வருட இறுதியில் செலுத்தப்பட வேண்டும். 'M' லிமிடெட் வருடத்திற்கு 5% வட்டியை கணக்கிட்டது. அருண் லாரி மீது வருடத்திற்கு 10% குறைந்த செல் இருப்பு முறையில் தேய்மானத்தை கணக்கிட்டார்.

அருண் ஏடுகளில் தேவையான பேரேட்டுக் கணக்கினை தயாரிக்கவும்.

21. The following information relates to Madurai Branch :

	Rs.
Stock on 1st January 2022	11,200
Branch Debtors on 1st January 2022	6,300
Goods sent to branch	51,000
Cash sent to branch for :	
Rent	1,500
Salaries	3,000
Petty cash	500
Sales at Branch :	
Cash	25,000
Credit	39,000
Cash received from debtors	41,200
Stock on 31st December 2022	13,600

Prepare branch account for the year 2022.

மதுரை கிளைக்கு தொடர்புடைய விபரங்கள் பின்வருமாறு :

	ரூ.
1.1.2022 -ல் சரக்கிருப்பு	11,200
1.1.2022-ல் கிளை கடனாளிகள்	6,300
கிளைக்கு அனுப்பிய சரக்கு	51,000
கிளைக்கு அனுப்பிய ரொக்கம் :	
வாடகை	1,500
ஊதியம்	3,000
சில்லரை ரொக்கம்	500
கிளையில் விற்பனை :	
ரொக்கம்	25,000
கடன்	39,000
கடனாளிகளிடம் பெற்ற ரொக்கம்	41,200
31.12.2022 சரக்கிருப்பு	13,600

2022-ம் ஆண்டிற்கான கிளைத் கணக்கினை தயாரிக்கவும்.

22. A, B and C were carrying on business in a firm sharing profits and losses in the ratio of 3:2:1 respectively. On 31st December 2021, the balance sheet of the firm stood as follows.

Liabilities	Rs.	Assets	Rs.
Creditors	13,590	Cash	5,900
Capital :		Debtors	8,000
A	15,000	Stock	11,690
B	10,000	Buildings	23,000
C	10,000		
	48,590		48,590

B retired on the above date and following terms were agreed upon :

(a) Buildings be appreciated by Rs.7,000.

(b) Provision for bad debts be made at 5% on debtors.

(c) Goodwill of the firm be valued at Rs.9,000.

(d) Rs.5,000 he paid to B immediately and the balance due to him be treated as the loan account carrying interest at 6% p.a.

Prepare ledger accounts in the books of the firm and show balance sheet after B's retirement.

A, B மற்றும் C ஆகியோர் வணிகம் ஒன்றினை மேற்கொண்டு இலாப நட்டத்தினை 3:2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். அந்த சமயத்தில் 31.12.2021-ன் தேதிய இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு.

பொறுப்புகள்	ரூ.	சொத்துக்கள்	ரூ.
கடனீந்தோர்	13,590	ரொக்கம்	5,900
முதல் :		கடனாளிகள்	8,000
A	15,000	சரக்கிருப்பு	11,690
B	10,000	கட்டிடம்	23,000
C	10,000		
	48,590		48,590

மேற்காணும் தேதியில் 'B' பின்வரும் நிபந்தனைக்குட்பட்டு ஓய்வு பெறுகிறார்

(அ) கட்டிட மதிப்பு ரூ.7,000 அதிகரித்துள்ளது

(ஆ) கடனாளிகள் மீது 5% வராக்கடன் ஒதுக்கி உருவாக்குக

(இ) நிறுமத்தின் நற்பெயர் ரூ.9,000 என மதிப்பிடப்பட்டது

(ஈ) 'B' க்கு உடனடியாக ரூ.5,000-ல் மீத தொகையினை கடனாக இருப்பில் வைத்துக் கொண்டு ஆண்டுக்கு 6% வட்டி வழங்கப்பட வேண்டும்.

நிறும ஏடுகளில் தோன்றும் பேரேட்டு கணக்குகளையும் மற்றும் 'B' -யின் ஓய்விற்குப் பிறகு உள்ள இருப்புநிலைக் குறிப்பினையும் தயார் செய்க.

23. A, B and C share profits in proportion of 4:2:2. On the date of dissolution their Balance sheet was as follows:

Liabilities	Rs.	Assets	Rs.
Creditors	56,000	Sundry Assets	1,60,000
A's Capital	40,000		
B's Capital	40,000		
C's Capital	24,000		
	1,60,000		1,60,000

The assets realized Rs.1,42,000. Creditors were paid in full. Realization expenses amounted to Rs.6,000. Close the books of the firm.

A, B மற்றும் C ஆகிய கூட்டாளிகள் இலாபத்தினை 4:2:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொண்டனர்

பொறுப்புகள்	ரூ.	சொத்துக்கள்	ரூ.
கடனீந்தோர்கள்	56,000	பற்பல சொத்துக்கள்	1,60,000
A-முதல்	40,000		
B-முதல்	40,000		
C-முதல்	24,000		
	1,60,000		1,60,000

சொத்துக்கள் விற்று பெற்றது ரூ.1,42,000, கடனீந்தோர்களுக்கு முழுவதுமாக செலுத்தப்பட்டது. தீர்வு செலவுகள் தொகை ரூ.6,000. நிறுவனத்தின் ஏடுகளை முடிக்கவும்.

24. Describe the role of accounting standards in preparing financial statements.

நிதிநிலை அறிக்கைகளை தயாரிப்பதில் கணக்கியல் தரநிலைகளின் பங்கினை விவரி.

———————